**தேயிலை சக்தி நிதியத்தின் - 2020**

---

தேயிலை சக்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் மீது இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லல் வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் பிரிவு 16(2) பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் ஒன்று தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதி ஒன்றுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் குறிப்பிட்ட காலத்தினுள் தயாரிப்பத்தல் மேற்கொள்ளப்படுகின்றது என உறுதிப்படுத்தல் வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு உரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். அவ்வாறாயினும், 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 மற்றும் 2004 பெப்ரவரி 24 திகதிய 01/2004 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம், கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கைகள் இந்த அறிக்கை திகதி வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

**2.1 கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லல்**

---

நிதியத்தின் அலுவல்கள் தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகள், நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று மற்றும் நிலையான வைப்புப் பதிவேடு ஒன்று நாளதுவரை பேணப்பட்டு வந்திருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உளமை**

---

நிதியத்தினால் இறுதியாக கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | பெறுமதி (ரூபா) |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 350,332,493 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 346,460,128 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **696,792,621** |
| **பொறுப்புக்கள்** | |
| உரிமை மூலதனம் | (111,648,540) |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 481,088,651 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 327,352,510 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **696,792,621** |

## 2.3 நிலுவை வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சக்தி நிதியம் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன், நிதியத்தின் உரிமை மூலதனம் முறையாக குறைந்திருந்தது. அதன்படி, 2012 ஆண்டின் போது ரூபா 112 மில்லியன் தொகைக்கான உரிமை மூலதனம் 2015 ஆண்டின் போது ரூபா 122 மில்லியனிற்கான மறை உரிமை மூலதன நிலைமை ஒன்றினைக் காட்டியது. இந்த நிலைமையின் காரணமாக 2016 ஜூலை 13 திகதிய அமப/16/1224/726/015-1 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தேயிலை சக்தி நிதியத்தின் அலுவல்கள் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளருக்கு சாட்டப்பட்டு நிதியத்தை மீள்கட்டமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி கணக்காய்வுத் திகதி வரை நிதியத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த நிலுவைத் தவணைகள் மற்றும் தாமதக் கட்டணங்களின் பெறுமதி ஆகிய | இணங்குகின்றேன். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிதியம் மீள் கட்டமைப்புச் செய்யும் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 517,625,223 தொகை எனினும், 2020 ஆண்டு வரை கிடைத்திருந்த குத்தகை வருமானம் ரூபா 130,867,813 தொகை ஆக இருந்தமையால் அது பெற வேண்டிய வருமானத்தின் சுமார் 25 வீதமாக இருந்தது. | | |
| (ஆ) | தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்கல் தொடர்பாக குத்தகையாளர்களுடன் அணுகியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஹொரண உரக் களஞ்சியம், மாவரல தேயிலைத் தோட்டம் மற்றும் 09 தொழிற்சாலைகளில் இருந்து 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை குத்தகைத் தொகை ஆகிய ரூபா 88,094,402 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | இணங்குகின்றேன்.<br>இந்த தொழிற்சாலைகளில் வலஹந்துவ, மகவெலி மற்றும் ரயிகம்கோரளை தொழிற்சாலைகள் தற்போது தேயிலை சக்தி நிதியத்திற்கு மீண்டும் உரித்தாக்கி புதிய வாங்குபவர்களுக்கு முகாமைத்துவம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தவணைகளை அறவீடு செய்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | குத்தகை உடன்படிக்கையின் படி அறவிடப்பட வேண்டிய மாதாந்த குத்தகை அடுத்த மாதம் முதலாம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்படாவிடின் செலவிடப்படும் ஒவ்வொரு நாட்களுக்காகவும் குத்தகை தொகையின் ஒரு சதவீத தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பதால் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 16 குத்தகைதாரரிடம் தாமதக் கட்டணமாக ரூபா 429,530,881 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததென அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன்.<br>தொழிற்சாலைகளில் உற்பத்தி அலுவல்கள் உச்சமட்ட வினைத்திறனுடன் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக முகாமைத்துவ வாங்குபவர்களுக்கு முடியாதிருந்ததுடன், பிரதேசத்தில் கொழுந்து உற்பத்தியின் படி தொழிற்சாலைக்கு போதியளவு கொழுந்துகள் பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டிருந்ததுடன், தொழிற்சாலையின் முகாமைத்துவக் கட்டணத்தொகை தொழிற்சாலையின் கொள்திறன் மீது தீர்மானிக்கப்படுவதனால் கூடிய பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. இந் நிலைமையின் கீழ் தொழிற்சாலையை நடாத்திச் செல்வதற்காக எதிர்பார்க்கும் முறை தொடர்பாக முகாமைத்துவம் வாங்குபவரிடம் யோசனைகள் பெற்றுக்கொண்டு அதன்படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தாமதக் கட்டணம் அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரயிகம்கோரளை தேயிலை சக்தி தொழிற்சாலை 2016 ஜுன் 10 திகதி முதல் 2021 ஜுன் 10 திகதி வரை திக்ஹேன தேயிலை சிறுபற்று அபிவிருத்தி சங்கத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த போதிலும், தொழிற்சாலை தொடர்ச்சியாக மூடப்படுவதன் காரணத்தினால் 2020 ஒக்தோபர் மாதம் மீண்டும் தொழிற்சாலை நிதியத்திற்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. அச் சந்தர்ப்பம் வரை அச் சங்கத்திலிருந்து ரூபா 7,960,310 தொகை தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | குத்தகை தொகை செலுத்துவதை புறக்கணித்தல் மற்றும் தொழிற்சாலைகளில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களினால் உடன்படிக்கை முடிவடைவதற்கு முன்னர் தொழிற்சாலையை மீண்டும் உரித்தாக்கி குறிப்பிட்ட பணத் தொகையினை அறவீடு செய்யும் செய்முறை ஒன்றுடன் புதிய குத்தகையாளர் ஒருவருக்கு தற்போது சாட்டப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் நிலுவைக் குத்தகைத் தொகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | (i) வலஹந்துவ தேயிலை சக்தி தொழிற்சாலை 2017 ஜுலை 23 திகதி முதல் 10 வருடங்கள் தேயிலை உற்பத்திக்காக கர்க் மெல்மேன் ஜொப்ஸ் தனியார் கம்பனியிற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் சாட்டப்பட்டிருந்தது. குத்தகைத் தவணை செலுத்தாமையால் 2018 ஜுன் 01 திகதி மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு உரித்தாகியிருந்த போதிலும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தவணை பெறுமதி மற்றும் தாமதக் கட்டணம் முறையே ரூபா 2,115,000 தொகை மற்றும் ரூபா 7,642,200 தொகையாக இருந்தது. | இணங்குகின்றேன். வலஹந்துவ தொழிற்சாலையின் சட்டரீதியான உரிமை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருந்ததுடன் அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் படி தொழிற்சாலை மற்றும் தோட்ட பங்களாக்கள் 02 தேயிலை சக்தி நிதியத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. அதன் படி முகாமைத்துவத்தினை கர்க் மெல்மேன் நிறுவனத்திற்கு சாட்டுதல் செய்வதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்ட பின்னர் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தினால் தோட்ட பங்களாவை மீண்டும் உரித்தாக்கிய காரணத்தினால் குறிப்பிட்ட நிறுவனத்தினால் தொழிற்சாலையின் உற்பத்தி அலுவல்களை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் தொழிற்சாலை மீண்டும் உரித்தாக்கப்பட்டது. அதன் படி குறிப்பிட்ட நிறுவனத்தினால் வைக்கப்பட்டிருந்த 06 மாத பாதுகாப்பு வைப்புத் தொகையை நிலுவை தவணைப் பணத்திற்காக பதிலீடு செய்த பின்னர் செலுத்த வேண்டிய மீதித் தொகை மற்றும் அதற்கான தாமதக் கட்டணம் காட்டப்பட்டுள்ளது. | குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அந்த தொழிற்சாலையை மீண்டும் உரித்தாக்கிய பின்னர் 2019 செப்தெம்பர் 09 திகதி முதல் 10 வருட காலப் பகுதிக்காக தேயிலை உற்பத்தி செய்வதற்காக பிறொம்பில் ஓர்தடொக்ஸ் கம்பனிக்கு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் சாட்டப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 திகதியளவில் நிலுவை முகாமைத்துவக் கட்டணம் ரூபா 1,240,000 தொகை மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 82,533 தொகை தொடர்ந்தும் நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | இணங்குகின்றேன். தொழிற்சாலையில் நீண்ட காலமாக உற்பத்தி அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தமையால் மீண்டும் உற்பத்தியை ஆரம்பிப்பதற்காக தேவையான அடிப்படை திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு மற்றும் 2020 மார்ச் மாதம் ஆரம்பமாகிய கொரோனா தொற்றுநோய் காரணமாக நீண்டகாலம் கழிந்தமையால் குறிப்பிட்ட தினத்தில் உற்பத்தி அலுவல்களை ஆரம்பிப்பதற்கு முடியாது இருந்தமையால் ஆரம்ப 03 தவணைப் பணங்கள் செலுத்துவதை புறக்கணித்திருந்த போதிலும் அதன் பின்னர் இது வரை தொடர்ச்சியாக உரிய முறையில் இந்த தவணைப் பணம் செலுத்தப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (iii) | பொறம்பில் கம்பனியின் பணிப்பாளரின் 2019 ஒக்தோபர் 16 திகதிய கடிதத்தின் பிரகாரம் ரூபா 1,500,000 தொகை பெறுமதியான உபகரணங்கள் தொழிற்சாலை ஒப்புக் கொள்ளும் போது தேயிலை சக்தி நிதியத்தினால் புதிய முகாமைத்துவத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். | தொழிற்சாலை உட்பட அனைத்துச் சொத்துக்களும் எழுத்துமூலம் குத்தகைதாரர்களுக்கு ஒப்படைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 1978 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 842 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரித்தல் மற்றும் நாளது வரை ஆக்கப்பட்டு பேணிச்செல்லல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருப்பதுடன் அதனை நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும் தேயிலை சக்தி நிதியத்திற்கும் சொந்தமான அனைத்து நிலையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் படி அரச | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேற்கூறிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சரியான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிற்சாலையை குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து பங்குதாரர்களுக்கு நலன்கள் வழங்குவதற்காக மற்றும் நலன்புரி பாதுகாப்பு நிதியத்தில் இருந்து தொழில்சாலை அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ரூபா 135 மில்லியனிற்கான தொகை மீண்டும் அந் நிதியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் பின்னர் மீதியாக உள்ள குத்தகை வருமானத்தை நிதி அமைச்சிற்கு செலவு வைத்தல் தேயிலை சக்தி நிதியத்தினை மீள்கட்டமைப்பு மேற்கொள்வதன் எதிர்பார்ப்பாகும் அவ்வாறாயினும், எதிர்பார்த்தவாறு தொழிற்சாலைகளின் குத்தகை வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு முடியாமையினால் நிதியம் மீள்கட்டமைக்கப்பட்ட 2016 ஆண்டு முதல் சுமார் 04 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் குறிப்பிட்ட குறிக்கோளை நெருங்குவதற்கு நிதியத்திற்கு முடியாமல் இருந்தது. | குத்தகை மற்றும் முகாமைத்துவ வருமானம் எதிர்பாரத்த விதத்தில் கிடைக்காமையால் நிறுவனத்தை மீள்கட்டமைக்கப்பட்ட குறிக்கோள் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் இருந்தது. எவ்வாறாயினும், இது வரை ரூபா 135 மில்லியன் நலன்புரி பாதுகாப்பு நிதியத்தை கட்டியெழுப்புவதற்காக குத்தகை மற்றும் முகாமைத்துவ வருமானத்தின் மூலம் சுமார் ரூபா 115 மில்லியன் தொகையொன்று நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு குறிப்பிட்ட நிதியம் கட்டியெழுப்பப்பட்டு வருவதுடன், எதிர்காலத்தில் எதிர்பார்த்துள்ள குறிக்கோளை நெருங்குவததற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. | அமைச்சரை தீர்மானத்தின் படி மீள் கட்டியமைத்தலின் குறிக்கோள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்தின் முழு அங்கத்துவம் பெற்றுள்ள மற்றும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அங்கத்தவர்களுக்கு அதன் சட்ட திட்டங்களின் படி காப்புறுதி உள்ளடக்கம் வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன், 2017 ஆண்டு முதல் காப்புறுதி நலன்கள் செலுத்துதல் தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் வருடாந்தம் காப்புறுதித் தவணைப் பணம் தேயிலை சக்தி நிதியத்தில் இருந்து செலுத்தப்படுகின்றது. அதன்படி 2020 மார்ச் 01 திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக இலங்கை மேர்சன்ட் வங்கி காப்புறுதிக் கம்பனிக்கு ரூபா 12,169,673 தொகைக்கு காப்புறுதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 முதல் 2020 பெப்ரவரி மாதம் வரை அலியன்ஸ் காப்புறுதிக் கம்பனிக்கு காப்புறுதி உள்ளடக்கம் சாட்டப்பட்டிருந்த போதிலும் அந்த கம்பனியில் இருந்து கிடைக்க வேண்டிய ஆனால் இதுவரை கிடைத்திருக்காத நலன்தொகை ரூபா 9,571,877 தொகை மற்றும் தாமதமாக விண்ணப்பித்த காரணத்தினால் காப்புறுதி உரிமை காணப்படாவிடினும், காப்புறுதி கம்பனியுடன் இணக்கமொன்று மேற்கொண்டு பெற்றுக்கொள்ள வேண்டிய காப்புறுதி நலன்களின் பெறுமதி ரூபா 1,900,000 தொகையாக இருந்தது. அதேபோல் ரூபா 1,340,000 தொகை இந்தக் காப்புறுதிக் கம்பனியில் இருந்து நலன் என கிடைத்திருந்த போதிலும், நலன்புரி காப்புறுதிப் பிரிவினால் குறிப்பிட்ட நலன் பெறுவோருக்கு செலுத்தியிருக்கவில்லை என தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வாளரால் இனங்காணப்பட்டிருந்தது. | தேயிலை சக்தி நிதியத்தை மீள் கட்டமைத்தல் தொடர்பாக 2016.06.21 திகதி பெருந்தோட்ட அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக கிடைத்திருந்த அமப 16/1224/726/015-1 மற்றும் 2016 ஜுலை 05 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி தேயிலை சக்தி நிதியத்தினால் செயற்படுத்தப்பட்ட நலன்புரி காப்புறுதிச் செயற்திட்டம் தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அந்த செயற்திட்டம் தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்கூறிய நிலைமை ஏற்பட்டிருந்ததுடன், தேயிலை சக்தி நிதியம் தொடர்பாக சிக்கல்கள் மற்றும் எதிர் காலத்தில் நிறுவனத்தை நடாத்திச் செல்லும் முறை தொடர்பாக யோசனைகள் பெற்றுக்கொள்வதற்காக தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ள குழுவின் மூலம் அது தொடர்பாக வழங்கப்படும் யோசனைகளின் படி, தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவை காப்புறுதி நலன்களின் பெறுமதியை பெற்றிருக்காமை தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினருக்கு எதிராக நியமனம் செய்யப்பட்டுள்ள குழுவினால் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். |
| (இ) | நிதியத்திற்கு சொந்தமான தொழிற்சாலைகளை குத்தகைக்கு கொடுப்பதற்கு ஏற்படுத்தியிருந்த குத்தகை உடன்படிக்கையின் (07) பிரிவின் பிரகாரம் உற்பத்தி அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தொழில்சாலைகளுக்குரிய மாதாந்த பச்சைத் தளிர் கொள்ளளவுக்கு பொருத்தமான பெறுமதி மீது காப்புறுதி | குத்தகை/ முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரகாரம் தொழிற்சாலைகளின் மாதாந்த பச்சை தளிர் கொள்ளளவு மீது வங்கி பிணைமுறிகள் தேயிலை சக்தி நிதியத்தின் பேரில் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் மற்றும் தொழில்சாலையின் கட்டிடங்கள், இயந்திரப் பொறிகள், மின் பிறப்பாக்கி முறைமை உட்பட | குத்தகை/ முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரகாரம் தேயிலை சக்தி நிதியத்தின் பேரில் காப்புறுதி உள்ளடக்கம் ஒன்று பெற்றுக்கொள்வதற்கு குத்தகை பெறும் தரப்பினரை |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கம் ஒன்று தேயிலை சக்தி நிதியத்தின் பேரில் பெற்றுக்கொள்வதற்கு குத்தகை பெறுவோர் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 09 தொழிற்சாலைகளினால் குறிப்பிட்ட காப்புறுதி உள்ளடக்கம் சமர்ப்பித்திருக்கவில்லை. | துணைக் கருவிகளுடன் தொழிற்சாலை வளவும் உட்பட முதலாம் தரப்பினரான தேயிலை சக்தி நிதியத்தின் பெயரில் இரண்டாம் தரப்பினரான குத்தகை/ முகாமைத்துவம் பெற்றுக்கொள்ளும் தரப்பினரால் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அதன்படி, குறிப்பிட்ட காப்புறுதி உள்ளடக்கம் சில குத்தகை முகாமைத்துவம் பெறுவோர்களினால் பெற்றுக்கொண்டு நிறுவனத்திற்கு சமர்ப்பித்திருந்ததுடன், வங்கி பிணைமுறி சமர்ப்பித்திருக்கவில்லை. | ஊக்குவிக்க வேண்டும். |
| (ஈ) | மாவரல தேயிலை தொழிற்சாலையின் தேயிலை உற்பத்தி அலுவல்கள் 03 வருடங்கள் முதல் அதாவது குத்தகைக்கு பெற்ற நாள் முதல் 2021 ஜனவரி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், கட்டிடம் மற்றும் இயந்திரப் பொறிகள் பழுதடைந்து காணப்பட்டிருந்தமையால் தொழிற்சாலை தேயிலை உற்பத்திக்கு பொருத்தமாக காணப்படாமை, தொழிற்சாலையில் காணப்படும் பாரிய நிதி நெருக்கடி போன்ற காரணங்களை காட்டி நிலுவை குத்தகையை செலுத்துவதை புறக்கணித்திருந்தது. | இணங்குகின்றேன். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் நிலுவை குத்தகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | 2020 மே 15 திகதி ஹொரண உரக் களஞ்சிய வளவில் விடுதி ஒன்றில் ஏற்பட்டிருந்த கலவரத்தினால் இரண்டு நபர்கள் இறந்திருத்தல் ஒருவர் கடுமையாக காயமடைதல் மற்றும் போதை பொருள் பயன்படுத்தியிருத்தலும் நடைபெற்றிருந்தது. இந்தக் காரணங்களினால் ஆதனங்களின் பாதுகாப்புத் தன்மை மற்றும் முறைகேடாக பயன்படுத்தல் என்பவற்றை தடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன்.<br>உடன்படிக்கை காலப்பகுதியுள் ஊழியர்கள் தொடர்பான அனைத்துப் பொறுப்புக்களும் முகாமைத்துவ பெறுகையாளருக்கு சாட்டப்படுகின்றது என உடன்படிக்கையின் பிரகாரம் இரு தரப்பினர்களும் இணங்கியிருந்த போதிலும், இவ்வாறான நிலைமை ஒன்று எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கும் படி முகாமைத்துவம் பெறுவோருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கிலிமலே தேயிலை சக்தி தொழிற்சாலை 2016 நவம்பர் 24 திகதி முதல் 10 வருட காலத்திற்காக தனியார் குத்தகையாளர் ஒருவருக்கு வழங்கியிருந்த போதிலும் 21 மாத காலப் பகுதியுள் உற்பத்தி நடவடிக்கைகள் ஏதும் இந்த தொழிற்சாலையில் மேற்கொண்டிருக்கவில்லை எனவும், | இணங்குகின்றேன்.<br>நிதியத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பாக குழுவினால் வழங்கப்படும் பரிந்துரையின் படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து புதிய பெறுவோருக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேயிலை உற்பத்தி மேற்கொண்டிருந்த மாதங்களிலும் தொழிற்சாலையின் கொள்திறன் 50 சதவீதத்தை விட குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும், கோவையிடப்பட்டுள்ள விடயங்களின் படி அவதானிக்கப்பட்டது. அதேபோல் நிதியத்திற்கு வழங்கியிருந்த தகவல்களின் படி உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைக்காக தேயிலை ஏலவிற்பனையில் குறைந்த விலை ஒன்று பெற்றிருத்தல், தளிர் வழங்குனர்களுக்கு தளிர்களுக்காக குறைந்த விலை செலுத்திய காரணத்தினால் தொடர்ச்சியாக தளிர் பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் தொழிற்சாலையின் செயற்பாட்டு வருமானத்தின் மூலம் செலவினை தீர்த்துக்கொள்ள முடியாமல் இருத்தல் ஆகிய காரணங்களினால் இன்னும் 06 வருடங்களுக்கு குத்தகை உடன்படிக்கை பேணிச் செல்வதற்காக முடியாத நிலைமை ஒன்று காணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | 2016 திசெம்பர் 28 திகதி முதல் 2026 திசெம்பர் 27 திகதி வரை 10 வருட காலப்பகுதிக்காக தெரனியகல தேயிலை சக்தி தொழிற்சாலையின் முகாமைத்துவம் வ/ப இரத்தினபுரி பிலான்டேஷன் (தனியார்) கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2020 செப்தம்பர் 14 திகதி உதவி தொழிற்சாலை உத்தியோகத்தரின் கடிதத்தின் பிரகாரம் தேயிலை சக்தி நிதியத்திற்கு உரித்தான வர்ணம் பிரிக்கும் இயந்திரம் பயன்படுத்தப்படாமல் தொழிற்சாலையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். தொழிற்சாலையை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் அந்த தொழிற்சாலையில் காணப்பட்ட கட்டிடங்கள் மற்றும் இயந்திரப் பொறிகளின் பெறுமதியின் மீது தொழிற்சாலையின் பெறுவோர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் படி தொழிற்சாலைகளை பெறுவோர்கள் தெரிவு செய்திருந்தமையால் பெறுவோர்களின் இணக்கமின்றி உடன்படிக்கை காலம் முடிவடைய முன்னர் பயன்படுத்தவில்லை என்ற விடயத்தை அடிப்படையாக கொண்டு பயன்படுத்தப்படாத இயந்திரப் பொறிகள் தொடர்பாக உடன்படிக்கையின் படி நிதியத்திற்கு செயற்படும் இயலுமை ஒன்று காணப்படவில்லை. | சொத்துக்களை பாதுகாத்துக்கொள்வதற்காக உரிய அதிகாரிகளினால் செயற்பட வேண்டியதுடன் பயன்படுத்தப்படாத சொத்துக்களை ஆக்கபூர்வமாக ஏனைய தொழிற்சாலை ஒன்றுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | நிதியத்திற்கு சொந்தமான மகாவெலி தேயிலை சக்தி தேயிலை தொழிற்சாலையின் காணியின் ஒரு பகுதி தொடர்பாக மற்றும் பலாங்கொடை தேயிலை சக்தி தொழிற்சாலை காணியின் 5.41 பர்சஸ் காணி ஒன்றில் கராஜ் ஒன்று நிர்மாணிப்பதற்கு எதிராக வெளித்தரப்பினர் ஒருவருக்கு நிதியத்தினால் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. | இணங்குகின்றேன். | தொழிற்சாலை அமைந்துள்ள வளவிற்கு வெளித்தரப்பினர் நுழைவதற்கு இடமளிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | தேயிலை சக்தி நிதியத்தில் இருந்து முகாமைத்துவத்தை பெற்றுக்கொண்ட தனியார் தொழிற்சாலைகளுக்கு செயற்படாத தொழிற்சாலைகளை செயற்படுத்தும் செயற்திட்டத்தின கீழ் உச்ச மட்ட எல்லை ரூபா 7 இலட்சத்திற்கு உட்பட்ட கடன்தொகை ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த பின்னர் தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவீடு செய்ய வேண்டியிருந்த தொகையினை அறவீடு செய்வதற்காக 05 தேயிலை தொழிற்சாலைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட செயற்திட்டதின் கீழ் நிலுவை கடன் தொகை காணப்பட்ட அனைத்து தொழிற்சாலைக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன், சில தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகை வழக்குத் தீர்ப்பின் மூலம் தற்போது அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வழக்கு அலுவல்களில் வெற்றிகரமாக ஈடுபட்டு அனைத்து கடன் தொகைகளையும் நிதியத்திற்கு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் போது தொழிலாளர் நீதிமன்ற கட்டளையின் படி ரூபா 1,565,370 இற்கான நட்டஈட்டுத் தொகையும், வழக்குகள் இணக்கத்தின் படி ரூபா 2,597,675 இற்கான நட்டஈட்டுத் தொகை ஒன்றும் தேயிலை சக்தி நிதியத்தில் இருந்து ஊழியர்களுக்கு செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | இணங்குகின்றேன். | சேவையை முடிவுறுத்தி நட்டஈடு வழங்கல் மேற்கொள்ளும் போது சட்டரீதியாக நடவடிக்கை செயற்படுவதற்கு முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஓ) ரயிகம்கோரளை தேயிலை சக்தி தொழிற்சாலையின் முதலாவது குத்தகை பெறும் தரப்பினரினால் பெற்றிருந்த குத்தகை காலப்பகுதியுள் தீர்க்க வேண்டிக் காணப்பட்ட நிலுவை மின்சாரக் கட்டணம், வியாபார கடன் கொடுத்தோர், தரகர் கம்பனி கடன், பிரதேச சபைக் கட்டணம், தேயிலை சக்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த குத்தகை தொகை என ரூபா 49,417,999 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் குத்தகை உடன்படிக்கையின் பிரிவு 9(i) பிரகாரம் துண்டிக்கப்பட்டிருந்த மின் இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக நிலுவை மின்சார பில் பத்திரங்களை முழுமையாக உடன்படிக்கையின் முதலாவது ஆண்டின் போது செலுத்தி முடிப்பதற்கும், தேயிலை சிறுபற்று உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 23,302,827 தொகைக்கான மொத்த நிலுவை கடன் தொகையை 05 வருடங்களில் செலுத்தி முடிப்பதற்கும், புதிய குத்தகை பெறும் தரப்பினரினால் இணங்கியிருந்தது. அவ்வாறாயினும், புதிய குத்தகை பெறும் தரப்பினால் பழைய குத்தகைதாரரின் பலவித கொடுப்பனவுகளுக்காக இணங்கியிருந்த போதிலும் இதுவரை குறிப்பிட்ட தனது நிலுவை குத்தகை தொகையையும் செலுத்தியிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். | உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கியிருந்த கொடுப்பனவுகளை தீர்த்துக்கொள்வதற்கு முடியாமல் இருந்த காரணங்களை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) 2017 ஜனவரி 30 திகதி முதல் 2027 ஜனவரி 29 திகதி வரையான 10 வருட காலப் பகுதிக்காக கொத்மலை தேயிலை சக்தி தொழிற்சாலையின் முகாமைத்துவம், ரயிகம் பிளான்டேஷன் தனியார் கம்பனிக்கு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (I) 2020 செப்தம்பர் 09 திகதி தேயிலை சக்தி நிதியத்தின் முகாமைத்துவ உதவியாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக பரிசோதனையின் போது தொழிற்சாலை மூடப்பட்டிருந்ததெனவும், 2021 ஜனவரி 25 திகதிய உதவித் | இணங்குகின்றேன். | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு தொழிற்சாலையை மீள் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தேயிலை ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் தேயிலை தொழிற்சாலையின் மேற்பார்வையின் போது இந்த தொழிற்சாலை செயற்படு நிலையில் காணப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | | |
| (II) இலங்கை மின்சார சபைக்கு 2021 ஜனவரி மாதத்தில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த மின்சார கட்டணம் ரூபா 699,363 தொகையாக காணப்பட்டதுடன், அது வரை பில் பத்திரங்களுக்கான கொடுப்பனவுகளுக்கு குத்தகை பெற்றவரினால் புறக்கணிக்கப்பட்டு இருந்ததென அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். | உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கியிருந்த கொடுப்பனவுகளை தீர்த்துக்கொள்வதற்கு முடியாமல் போன காரணத்தை ஆய்வு செய்து அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (III) இந்த தேயிலை சக்தி தொழிற்சாலை இலங்கை மகவெலி அதிகார சபையினால் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், நிதியத்தினால் வருடாந்தம் மகாவெலி அதிகார சபைக்கு குத்தகை தொகையை செலுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, 2019 ஆண்டிற்குரிய ரூபா 1,204,335 தொகை மகாவெலி அதிகார சபைக்கு தேயிலை சக்தி நிதியத்தினால் குத்தகை தொகை என செலுத்தியிருந்ததுடன், 2020 ஆண்டிற்காக அந்தத் தொகையை மீண்டும் திருத்தம் மேற்கொண்டு செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. அதன்படி, தொழிற்சாலை வெளித் தரப்பினருக்கு சாட்டுவதன் மூலம் நிலுவையாக இருந்து மின்சார பில் பத்திரங்களின் எண்ணிக்கையும், 5 வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும் மகாவெலி அதிகார சபைக்கு செலுத்த நேரிடும் குத்தகைத் தொகையும் இந்த நிதியத்திற்கு பாரிய செலவுப் பொறுப்பொன்றாக காணப்படுவதுடன், தொழிற்சாலை செயற்படுத்தப்படாமையால் அதில் காணப்படும் சொத்துக்கள் | இணங்குகின்றேன். தொழிற்சாலைக்கு தேவையில்லாத தோட்ட பங்களா தற்போது இலங்கை மகாவெலி அதிகார சபைக்கு மீண்டும் உரித்தாக்கப்பட்டு வருடாந்தம் செலுத்த வேண்டிய குத்தகை தொகையை குறைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் தொடர்பாக தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கியிருந்த கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அழிவடைவதும் மேற்கொள்ளப்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.2 ஏனைய அமைப்புக்களுககு விடுவிக்கப்பட்ட வளங்கல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியத்தை மீள் கட்டமைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 2016 ஜூலை 13 திகதிய அமப/16/1224/726/015-1 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி நிதி அமைச்சரின் அவதானிப்புகளில் காட்டப்பட்டுள்ளவாறு நிரந்தர பதவியணியினரை அமைச்சின் கீழ் வைக்கப்பட்டு ஏனைய நிறுவனங்களுக்கு இணைக்கும் போது குறிப்பிட்ட நிறுவனத்தின் விருப்பத்தின் மீது மற்றும் பதவியணிச் சம்பளம் வேதனங்கள் அந் நிறுவனங்களில் காணப்படும் பாதீட்டு ஏற்பாடுகள் மீது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக முகாமைத்துவம் மூன்று உதவி உத்தியோகத்தர்கள் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கும், சாரதி ஒருவர் தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகார சபைக்கும், விடுவிக்கப்பட்டு 2018 ஆண்டின் போது அந்த உத்தியோகத்தர்களுக்கான சம்பளமாக ரூபா 1,459,614 தொகை மற்றும் 2019 ஆண்டிற்காக ரூபா 1,822,298 தொகையும் இந்த நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல் 2020 ஆண்டின் போதும் மேற்கூறிய முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர் இருவர் மற்றும் சாரதி ஒருவருக்காக ரூபா 1,587,324 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமாக இருந்த GG-6407 இலக்கம் கொண்ட வாகனத்திற்காக சாரதி வைக்கப்பட்டிருந்ததுடன், தேயிலை சிறுபற்று அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த தேயிலை சக்தி நலன்புரி பிரிவின் தேவையின் அடிப்படையில் அந்த வாகனத்துடன், சாரதி அந்த நிறுவனத்திற்கு இணைக்கப்பட்டிருந்தார். குறிப்பிட்ட நிறுவனங்களில் அப்போது காணப்பட்ட சேவையின் தேவைப்பாடுகளின் மீது ஏனைய ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி அது தொடர்பாக மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெளி நிறுவனம் ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மீளளிப்புச் பெற்றுக்கொள்ள வேண்டும். |